DEPOSITION OF WITNESS
(CHAPTER XXV BHARATIYA NAGARIK SURAKSHA SANHITA)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SENDAMANGALAM
C.C.No.391/2025
PW - 2

| | | |
|---|---|---|
| Name | : | கோபிநாத் (Lw - 2) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(**எதிரி ஆஜர் இல்லை **BNSS** பிரிவு **355-**ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.)**

முதல் விசாரணை **Date : 23.07.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், வெண்ணந்தூர் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2024 முதல் 2025ம் ஆண்டு வரை நாமக்கல் மதுவிலக்கு அமல் பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்தேன்.

கடந்த 23.08.2025ம் தேதி காவல் உதவி ஆய்வாளர் திரு.செல்லதுரை அவர்களின் தலைமையில் நானும், தலைமை காவலர் திரு.விஜயகுமார் ஆகியோர் குற்ற தடுப்பு நடவடிக்கையாக ரோந்து பணியில் இருந்தோம். அன்றைய தினம் காலை 07.00 மணியளவில் சேந்தமங்கலம் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட காரவள்ளி பஸ்டாப் அருகே கண்காணித்தபோது சுமார் 35 வயது மதிக்கத்தக்க ஒரு நபர் சந்தேகப்படும் வகையில் கருப்பு நிற சோல்டர் பேக்கை மாட்டிக்கொண்டு நின்று கொண்டிருந்தார். அவரை எனக்கு அடையாளம் தெரியும். அவர் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை.

எதிரியை நாங்கள் பிடித்து விசாரித்தபோது அவர் தன்னுடைய பெயர் கலைமணி த.பெ.சம்பத் என்றும் தான் சட்டத்திற்கு புறம்பாக தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட கர்நாடக அரசு மதுபானத்தை வாங்கி வைத்திருந்ததாக கூறினார். அவரை காவல் உதவி ஆய்வாளர் திரு.செல்லதுரை அன்றைய தினம் 07.15 மணிக்கு காரணம் கூறி கைது செய்தார். பின்னிட்டு எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பொதுஜன சாட்சிகள் யாரும் முன்வராததால் தலைமை காவலர்

திரு.விஜயகுமார் மற்றும் என் முன்னிலையில் பதிவு செய்தார். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **(**ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் அ**.**சா**.**ஆ**.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)**

பின்னர் எதிரி தன் வைத்திருந்த கருப்புநிற சோல்டர் பேக்கில் இருந்து எடுத்து ஆஜர் செய்த தலா 750 ML அளவுள்ள Old Monk XXX Rum – 2 பாட்டில்கள், 750 ML அளவுள்ள Bacardi Limon Rum - 1 பாட்டில் மற்றும் கருப்பு நிற சோல்டர் பேக் ஆகியவற்றை பொதுஜன சாட்சிகள் யாரும் முன்வராததால் தலைமை காவலர் திரு.விஜயகுமார் மற்றும் என் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து காவல் உதவி ஆய்வாளர் திரு.செல்லதுரை கைப்பற்றினார். அ.சா.ஆ.2 கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். பின்னர் காவல் உதவி ஆய்வாளர் திரு.செல்லதுரை எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களை புகைப்படம் எடுத்தார்.

பின்னர் காவல் உதவி ஆய்வாளர் திரு.செல்லதுரை எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரி மீது நிலைய குற்ற எண்.240/2025 சட்டபிரிவுகள் 4(1)(C) TNP Act-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். பின்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.செல்லதுரை கைப்பற்றப்பட்ட மதுபான பாட்டில்களை காவல் உதவி ஆணையர் (கலால்) நாமக்கல் அவர்கள் வசம் ஒப்படைத்தார்.

பின்னர் அன்றைய தினம் 12.30 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் திரு.செல்லதுரை என்பவர் தலைமை காவலர் திரு.விஜயகுமார் மற்றும் என்னுடன் சம்பவ இடம் சென்று பொதுஜன சாட்சிகள் யாரும் முன்வராததால் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார். இது சம்மந்தமாக காவல் உதவி ஆய்வாளர் திரு.செல்லதுரை என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பொதுஜனம் நடமாட்டம் அதிகம் உள்ள பேருந்துநிறுத்தம் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் நிறைய வீடுகள் மற்றும் கடைகள் உள்ளது என்றால் சரிதான். அந்த கடைகள் மற்றும் வீடுகளில் உள்ளவர்களை விசாரித்து சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் பொதுஜனங்களை யாரையும் எதிரி அரசு மதுபானங்களை உரிமம் இன்றி விற்பனை செய்கிறாரா என்பது பற்றி விசாரித்து தெரிந்து கொண்டோமா என்றால் இல்லை. எதிரி கர்நாடகா அரசு மதுபான கடைகளில் மது வாங்கியதாக சொல்லியுள்ள நிலையில் அந்த மதுபான கடையில் எதிரிதான்

மதுபானத்தை வாங்கினார் என்பதை உறுதி படுத்தும் வகையில் ரசீதுகள் எதையும் கைப்பற்றவோ அல்லது கர்நாடகா அரசு மதுபான கடை ஊழியர்கள் யாரையும் விசாரிக்கவோ இல்லை என்றால் சரிதான். மேற்படி சோல்டர் பேக்கை கைப்பற்றி காவல் ஆய்வாளர் நீதிமன்றத்தில் ஒப்படைத்தாரா என்றால் இல்லை. எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மதுபானங்கள் 4 1/2 லிட்டருக்கும் குறைவானது என்றால் சரிதான். மேற்படி மதுபானத்தை அவரது சொந்த பயன்பாட்டிற்கு வைத்திருந்தார என்பதை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளோமா என்றால் இல்லை. எதிரியிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறும்போது எதிரி காவலர்களாகிய எங்களது பொறுப்பில் தான் இருந்தார் என்றால் சரிதான். எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறும்போது அது அவருக்கு எதிராக பயன்படுத்தப்படகூடும் என்ற சங்கதியை காவல் ஆய்வாளர் எதிரியிடம் கூறி ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சங்கதிகளை ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சொன்னார் ஆனால் அதை குறிப்பிடப்படவில்லை. சம்பவ இடத்தில் எதிரியிடம் இருந்து மற்ற நபர்கள் மதுபானங்களை வாங்கி கொண்டு சென்றார்களா என்பது பற்றி விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட பாட்டில்கள் என் முன்னிலையில் திறந்து பார்க்கப்படவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட பாட்டில்களை என் முன்னிலையில் உதவி ஆய்வாளர் யாரிடமும் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் வழக்கு சொத்துக்களுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் ஏற்கனவே பிற வழக்குகளில் கைப்பற்றப்பட்டு காவல்நிலையத்தில் வைத்திருந்த மது பாட்டில்களை எதிரியிடம் இருந்து கைப்பற்றியதாக கூறி எதிரியின் மீதுபொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கின் ஆவணங்களை காவல்நிலையத்தில் வைத்து தயாரித்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து தயாரித்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் பார்வை மகஜர் தயார் செய்யப்படவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**